# <u>ஆற்காடு நகராட்சி</u>

2025 நவம்பர் மாதம் 26 ஆம் நாள் புதன் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக் கூட்ட கூட்டத்தின் உண்மை நகல்.

## <u>மன்றப்பொருள்</u>

**பொருள் எண் .01)**

நகராட்சி ஆணையாளரின் செப்டம்பர்–2025 மற்றும் அக்டோபர்–2025 மாதங்களின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அ. கு. :– 1) மன்றம் பதிவு செய்யலாம்.

<u>ந. க. எண்.1880/2023/சி1,</u>

தீர்மானம் எண்.273, நாள் : 26.11.2025.

மன்றம் பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண் .02)**

நகராட்சி பொறியாளர் பொறுப்பு அவர்களின் செப்டம்பர்–2025 மற்றும் அக்டோபர்–2025 மாதங்களின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ. கு. :– 1) மன்றம் பதிவு செய்யலாம்.

<u>ந. க. எண்.0665/2018/சி1,</u>

தீர்மானம் எண்.274, நாள் : 26.11.2025.

மன்றம் பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண் .03)**

அரசாணை நிலை எண். 28. நாள். 22.02.2023. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA4)ல் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளுதல் திட்டம் மற்றும் மூலதன மான்ய நிதி 2022–2023ன் கீழ் நகராட்சிக்கு சொந்தமான பேருந்துநிலையத்தில் புதியதாக 112 கடைகள் கட்டப்பட்டு வருகிறது. இக்கடைகளுக்கான 9 ஆண்டு குத்தகைக்கு (Pre– Auction) பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

| வ. எண் | கடைகள் உள்ள கட்டடம்/ இருப்பிடத்தி ன்விவரம் | கடை எண்கள் | தளம் | கடை யின்அ ளவு ச.அடி யில் | ஒப்பந்தப் புள்ளி / ஏலபொறுப்பு த்தொகை (கடைஒன்று க்கு) ரூ. | கூடுதல் காப்புத் தொகை ரூ |
|---|---|---|---|---|---|---|
| 1 | பேருந்து நிலைய கடைகள் | 01 | தரை | 193 | 2,00,000/– | 1,00,000/– |
| 2 | | 02 | தரை | 549 | 8,00,000/– | 4,00,000/– |
| 3 | | 03 | தரை | 838 | 10,00,000/– | 5,00,000/– |
| 4 | | 04 | தரை | 150 | 2,00,000/– | 1,00,000/– |
| 5 | | 05 | தரை | 152 | 2,00,000/– | 1,00,000/– |
| 6 | | 06 முதல் 23 வரை | தரை | 150 | 2,00,000/– | 1,00,000/– |
| 7 | | 24 முதல் 29 வரை | தரை | 113 | 2,00,000/– | 1,00,000/– |
| 8 | | 30 முதல் 40 வரை | தரை | 114 | 2,00,000/– | 1,00,000/– |
| 9 | | 41 | தரை | 116 | 2,00,000/– | 1,00,000/– |
| 10 | | 42 | தரை | 114 | 2,00,000/– | 1,00,000/– |
| 11 | | 43 முதல் 52 வரை | தரை | 150 | 2,00,000/– | 1,00,000/– |
| 12 | | 53 முதல் 55 வரை | தரை | 150 | 2,00,000/– | 1,00,000/– |
| 13 | | 56 | தரை | 161 | 2,00,000/– | 1,00,000/– |
| 14 | | 57 முதல் 68 வரை | தரை | 150 | 2,00,000/– | 1,00,000/– |
| 15 | | 69 முதல் 74 வரை | தரை | 113 | 2,00,000/– | 1,00,000/– |
| 16 | | 75 முதல் 90 வரை | தரை | 114 | 2,00,000/– | 1,00,000/– |
| 17 | | 91 | தரை | 123 | 2,00,000/– | 1,00,000/– |
| 18 | | 92 முதல் 95 வரை | தரை | 114 | 2,00,000/– | 1,00,000/– |
| 19 | | 96 | தரை | 125 | 2,00,000/– | 1,00,000/– |
| 20 | | 97 | தரை | 127 | 2,00,000/– | 1,00,000/– |
| 21 | | 98 | தரை | 120 | 2,00,000/– | 1,00,000/– |
| 22 | | 99 | தரை | 139 | 2,00,000/– | 1,00,000/– |
| 23 | | 100 | தரை | 106 | 2,00,000/– | 1,00,000/– |
| 24 | | 101 | தரை | 101 | 2,00,000/– | 1,00,000/– |
| 25 | | 102 | தரை | 123 | 2,00,000/– | 1,00,000/– |
| 26 | | 103 முதல் 108 வரை | தரை | 123 | 2,00,000/– | 1,00,000/– |
| 27 | | 109 | தரை | 120 | 2,00,000/– | 1,00,000/– |
| 28 | | 110 முதல் 112 வரை | தரை | 114 | 2,00,000/– | 1,00,000/– |
| | மொத்தம் | 112 | | | | |

<u>அலுவலககுறிப்பு :</u>

கடைகளை பொது ஏலத்தில் விட மன்றம் அனுமதிக்கலாம். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023ன் பிரிவு–316ல் பழைய குத்தகைதாரர்களுக்கு முன்னுரிமை வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. மதுரை உயர்நீதிமன்ற வழக்கு எண்.WP(MD) No.19348/19217 of 2025 மற்றும் WMP(MD) No.14876, 14877, 14751 மற்றும் 14752 of 2025ல் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023ன் விதி எண்.316ஐ மீறியதாகக் கூறி நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டுள்ளது. எனவே, 06.08.2024ந் தேதியிட்ட அரசாணை நிலை எண்.(2பா) 66. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட மேற்கூறிய வழிகாட்டுதலின் அடிப்படையில் முன்னுரிமை வழங்க இயலாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பொருள் குறித்து பொதுமக்களிடமிருந்து புகார்கள் வரப்பெற்றுள்ளது. நீதிமன்ற உத்தரவு குறித்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து எவ்வித தெளிவுரையும் வரப்பெறவில்லை. எனவே, அனைத்து கடைகளின் குத்தகையினை பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி மற்றும் பழைய குத்தகைதார்களுக்கு முன்னுரிமை வழங்குவது குறித்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் தெளிவுரை பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>(ந.க.எண்.0575/2025/அ1)</u>

தீர்மானம் எண்.275, நாள் : 26.11.2025.

ஆற்காடு நகராட்சி பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள கடைகள் தற்போது ஏலம் விடப்பட்டாலும் ஒப்படைக்கும் நாளிலிருந்துதான் வாடகை வசூலிக்கும் சூழ்நிலை உள்ளதால் பேருந்து நிலைய கடைகளை போர்க்காள அடிப்படையில் விரைந்து முடிக்க மன்றம் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

**பொருள் எண் .04)**

அரசாணை நிலை எண். 4(D). 23. நாள். 01.12.2022. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (SS&FC)ல் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022–2023ன் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான தினசரி மார்க்கெட்டில் அமைக்கப்பட்டுள்ள 74 கடைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இக்கடைகளுக்கான 9 ஆண்டு குத்தகைக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

| வ. எண் | கடைகள் உள்ள கட்டடம்/ இருப்பிடத்தின்விவரம் | கடை எண்கள் | தளம் | கடையின் அளவு ச.அடியில் | ஒப்பந்தப் புள்ளி / ஏலபொறுப்புத் தொகை (கடைஒன்றுக்கு) ரூ. | கூடுதல் காப்புத் தொகை ரூ |
|---|---|---|---|---|---|---|
| 1 | நகராட்சி தினசரி மார்கெட் கடைகள் | 01 முதல் 24 வரை | தரை தளம் | 150 | 2,00,000/- | 1,00,000/- |
| | | 25 | | 175 | 2,00,000/- | 1,00,000/- |
| | | 26 | | 207 | 2,00,000/- | 1,00,000/- |
| | | 27 முதல் 33 வரை | | 150 | 2,00,000/- | 1,00,000/- |
| | | 34 முதல் 40 வரை | | 155 | 2,00,000/- | 1,00,000/- |
| | | 41 முதல் 64 வரை | | 150 | 2,00,000/- | 1,00,000/- |
| | | 65 முதல் 74 வரை | | 220 | 2,00,000/- | 1,00,000/- |
| | மொத்தம் | 74 | | | | |

<u>அலுவலககுறிப்பு :</u>

கடைகளை பொது ஏலத்தில் விட மன்றம் அனுமதிக்கலாம். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023ன் பிரிவு-316ல் பழைய குத்தகைதாரர்களுக்கு முன்னுரிமை வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. மதுரை உயர்நீதிமன்ற வழக்கு எண்.WP(MD) No.19348/19217 of 2025 மற்றும் WMP(MD) No.14876, 14877, 14751 மற்றும் 14752 of 2025ல் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023ன் விதி எண்.316ஐ மீறியதாகக் கூறி நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டுள்ளது. எனவே, 06.08.2024ந் தேதியிட்ட அரசாணை நிலை எண்.(2பா) 66. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட மேற்கூறிய வழிகாட்டுதலின் அடிப்படையில் முன்னுரிமை வழங்க இயலாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பொருள் குறித்து பொதுமக்களிடமிருந்து புகார்கள் வரப்பெற்றுள்ளது. நீதிமன்ற உத்தரவு குறித்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து எவ்வித தெளிவுரையும் வரப்பெறவில்லை. எனவே, அனைத்து கடைகளின் குத்தகையினை பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி மற்றும் பழைய குத்தகைதார்களுக்கு முன்னுரிமை வழங்குவது குறித்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் தெளிவுரை பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>(ந.க.எண்.0575/2025/அ1),</u>

தீர்மானம் எண்.276, நாள் : 26.11.2025.

ஆற்காடு நகராட்சிக்கு சொந்தமான தினசரி மார்க்கெட்டில் கட்டப்பட்டுள்ள கடைகள் தற்போது ஏலம் விடப்பட்டால் ஒப்படைக்கப்படும் நாளிலிருந்துதான் வாடகை வசூலிக்கும் சூழ்நிலை உள்ளதால் தினசரி மார்க்கெட் கடைகளை போர்க்கால அடிப்படையில் விரைந்து முடிக்க மன்றம் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

## பொருள் எண் .05)

அரசாணை நிலை எண். 28. நாள். 22.02.2023. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA4)ல் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளுதல் திட்டம் மற்றும் மூலதன மான்ய நிதி 2022–2023ன் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் இருசக்கர வாகன நிறுத்துமிடம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்விடத்திற்கு 3 ஆண்டு குத்தகைக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

| வ. எண் | கடைகள் உள்ள கட்டடம்/ இருப்பிடத்தின் விவரம் | எண்ணிக் கை | தளம் | அளவு ச.அடியில் | ஒப்பந்தப் புள்ளி / ஏலபொறுப்பு த்தொகை (ரூ.) | கூடுதல் காப்புத் தொகை ரூ |
|---|---|---|---|---|---|---|
| 1. | பேருந்து நிலையத்தில் இருசக்கர வாகன நிறுத்துமிடம் | 1 | ACC | 3910 | 5,00,000/– | 2,00,000/– |

<u>அலுவலககுறிப்பு :</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் இருசக்கர வாகன நிறுத்துமிடத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

<u>(ந.க.எண்.0575/2025/அ1)</u>

தீர்மானம் எண்.277, நாள் : 26.11.2025.

ஆற்காடு நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள புதியதாக கட்டப்பட்டுள்ள இரு சக்கர வாகனம் நிறுத்தயிடம் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளதால் நகராட்சி வருவாய்யை கருத்தில் கொண்டு உடனடியாக ஏலம் விட மன்றம் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

## பொருள் எண் .06)

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான தினசரி மார்க்கெட், புதிய பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள கடைகள் மற்றும் இரு சக்கர வாகன நிறுத்துமிடத்திற்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் மற்றும் தமிழ் தனிசரி நாளிதழில் விளம்பரம் செய்ய தோராய செலவினம் ரூ.2,00,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.

<u>அலுவலகக்குறிப்பு,</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. 2025–2026ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>(ந.க.எண்.0575/2025/அ1),</u>

தீர்மானம் எண்.278, நாள் : 26.11.2025.

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் .07)**

ஆற்காடு நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தின் தென் மேற்கு பகுதியில் முன்னாள் முதல்வர் திரு. கே . காமராஜர் அவர்களின் சிலை அமைந்துள்ளது . மேற்காணும் சிலை அமைக்க ஆற்காடு ஜனதாதளம் கட்சி சார்பாக , அப்போதைய அதன் தலைவர் திரு.முனிரத்தினம் அவர்கள் அனுமதி கோரிய விண்ணப்பத்தின் பேரில், அரசின் அனைத்து வழிக்காட்டுதலின்படி இறுதி செய்து ஆற்காடு நகரமன்ற தீர்மான எண்.393,நாள்:26.12.1986 அன்று ஜனதாதளம் கட்சிக்கு நிபந்தனைகளுடன் முன்னாள் முதல்வர் திரு. கே . காமராஜர் அவர்களின் சிலை நிறுவிக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது.

தற்போது, ஆற்காடு பழைய பேருந்து நிலையம் முழுமையாக இடிக்கப்பட்டு, புதியதாக கடைகளுடன் கூடிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு வருகிறது. ஆற்காடு பேருந்து நிலையத்தின் மேற்கு பகுதியில் , வேலூர் மெயின் ரோட்டிலிருந்து 70 அடி சாலையை இணைக்கும் வகையில் சாலை அமைக்கப்பட்டுள்ளது . வேலூர் மெயின் ரோட்டினை ஒட்டியுள்ள மேற்காணும் சாலையின் நுழைவு பகுதியில் முன்னாள் முதல்வர் காமராஜர் சிலை அமைந்துள்ளதை, இடமாற்றம் செய்வது தொடர்பாக தற்போதைய ஜனதாதளம் (ஐக்கியம்) கட்சி தலைவர் திரு.ஆர்.எஸ்.ராமலிங்கம் என்பவருக்கு 03.10.2025 தேதியன்று கடிதம் அனுப்பப்பட்டது.

அதனை தொடர்ந்து , ஜனதாதளம் (ஐக்கியம்) கட்சி தலைவர், 14.10.2025 தேதியன்று நகராட்சிக்கு அளித்த கடிதத்தில், பொதுமக்களுக்கும் , போக்குவரத்திற்கும் இடையூறு இல்லாமல் திரு.கே.காமராஜர் முன்னாள் முதல்வர் அவர்களின் திருஉருவச்சிலையை இடமாற்றம் செய்து அமைக்க இடம் ஒதுக்கி தருமாறும் , கட்சியின் சொந்த செலவிலேயே மேற்காணும் சிலையை இடமாற்றம் செய்து கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே , ஆற்காடு நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய எல்லைக்குள், பொதுமக்களுக்கும் ,போக்குவரத்திற்கும் இடையூறின்றி , நிலையில் உள்ள இடத்திலிருந்து 9 அடிகள் முன்புறம் நகர்த்தி திரு.கே.காமராஜர் முன்னாள் முதல்வர் அவர்களின் திருஉருவச்சிலையை கோரிக்கையின் அடிப்படையில் இட மாற்றம் செய்வது தொடர்பாக , மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

ஆற்காடு நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய எல்லைக்குள், பொதுமக்களுக்கும் , போக்குவரத்திற்கும் இடையூறு இல்லாமல் திரு.கே.காமராஜர் முன்னாள் முதல்வர் அவர்களின் திருஉருவச்சிலையை இடமாற்றம் செய்து அமைக்க , ஜனதாதளம் (ஐக்கியம்) கட்சியின் சொந்த செலவிலேயே , மேற்காணும் சிலையை இடமாற்றம் செய்து இந்நகர மன்றத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**( ந.க.எண்.7603 / 1987 / எப்1)**

தீர்மானம் எண்.279, நாள் : 26.11.2025.
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் .08)**

ஆற்காடு நகராட்சியில் பல்வேறு நிலையில்களில் பணியாற்றி வரும் பணியாளர்கள், வயது முதிர்வின் காரணமான ஓய்வு பெற்ற பணியாளர்கள் மற்றும் பணியில் இருந்து போது இறந்த பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் சேமநலநிதி சந்தா மற்றும் கடன் தொகை அரசு கருவூல அலுவலகத்தில் உரிய கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் 31.03.1999 வரை மட்டும் இந்நகராட்சியில் பணியாற்றிய பணியாளர்களுக்கு சேமநலநிதி கணக்கின் மீது கருவூலத்தில் வட்டி பெற்று வழங்கப்பட்டுள்ளது. 01.04.2009 முதல் 31.03.2025 வரை கருவூலத்தில் சேமநலநிதிக் கணக்கின் மீது வட்டி பெறப்படாமல் நிலுவையில் உள்ளது.

எனவே அனைத்து நிலையில் பணியாற்றி வரும் பணியாளர்கள், வயது முதிர்வின் காரணமான ஓய்வு பெற்ற பணியாளர்கள் மற்றும் பணியில் இருக்கும் போது இறந்த பணியாளர்களின் சேமநலநிதி கணக்கின் மீது, 1999–2000 முதல் 2024–2025 வரை கருவூல கணக்கீன் மீது வட்டி கோரி முன்மொழிவுகள் தயார் செய்து வழங்கவும், 1999–2000 முதல் 2024–2025 வரை சேமநலநிதி கணக்கின் மீது தனிநபர் வட்டி கணக்கீடு செய்து வழங்கவும், 10.11.2025ம் தேதி விலைப்புள்ளி கோரியதில் கீழ்காணும் விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வரிசை எண். | நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் ரு. |
|---|---|---|
| 1. | வெங்கட் ஈவண்ட்ஸ், 13. வேல் நகர் விரிவாக்கம், அரும்பாக்கம் சென்னை–88 | 7,89,000.00 |
| 2. | எண்டெக் சொலிசன்ஸ், 10. கௌதமர் தெரு, தாம்பரம், சென்னை–59 | 7,32,000.00 |
| 3. | ராஜீவ் ஷாப்ட் சிஸ்டம், 35பி, பாரதிதாசன் நகர், 1–வது தெரு, அரும்பாக்கம், சென்னை–88 | 6,75,000.00 |

வரப்பெற்ற விவைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள திரு.ராஜீவ் ஷாப்ட் சிஸ்டம், 35பி, பாரதிதாசன் நகர், 1–வது தெரு, அரும்பாக்கம், சென்னை–88 நிறுவனத்தினை விலை விகிதம் ரு.6,75,000/ ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்க மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 6307 /2009/அ2**

தீர்மானம் எண்.280, நாள் : 26.11.2025.
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் .09)

ஆற்காடு நகராட்சிக்கு சொந்தமான வார்டு–A பிளாக்–33 நகரளவு எண்: 104, 105, 129, 130, 131, 132, 133 இல் புதிதாக பேருந்து நிலையம் கட்டும் பணி நடைபெற்று வருவதில், ஆற்காடு ரோட்டரி சங்கத்துடன் இணைந்து திரு.என்.கேங்சென், குஷல் ஜுவல்லரி, ஆற்காடு என்பவர் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து பொதுமக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க அனுமதி கோரி விருப்ப கடிதம் அளித்து. இது சம்பந்தமாக ஆற்காடு நகரமன்ற தீர்மானம் எண்.113, நாள்.30.04.2025இல் இந்நகரமன்றம் அனுமதி அளித்தது. திரு.என்.கேங்சென், குஷல் ஜுவல்லரி, ஆற்காடு என்பவரிடமிருந்து மேற்காணும் பணியை செயல்படுத்த உரிய ஒப்பந்த பத்திரம் ஏதும் இந்நகராட்சிக்கு அளிக்கப்படவில்லை. ஆகவே மேற்படி, ஆற்காடு நகராட்சி பேருந்து நிலையத்தில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அனுமதி அளித்த நகரமன்ற தீர்மானத்தை ரத்து செய்திடவும். மேலும், ஆற்காடு நகர பேருந்து நிலையத்தில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க மகாத்மா காந்தி அறக்கட்டளை ஆற்காடு, சார்பில் விருப்ப கடிதம் அளித்துள்ளனர்.

புதிதாக கட்டப்பட்டு வரும் ஆற்காடு நகர பேருந்து நிலைய நவீன கட்டண கழிப்பிடம் எதிரிலும், நகராட்சி பேருந்து நிலைய இருசக்கர வாகன நிறுத்துமிடம் அமைய உள்ள இடத்திற்கு அருகாமையிலும் 0.37.28.0 பரப்பளவு உள்ள காலி இடத்தில், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் அமைப்பதற்கான கட்டிட பணிகள் மேற்கொள்வது, ஆணையரின் பெயரில் மின் இணைப்பு பெற்று வழங்கப்படும். எனவும், குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் கொள்முதல் செய்து பொருத்துவது, அதற்கான மின் கட்டணங்கள் செலுத்துவது மற்றும் தனியாக பணியாளர்களை கொண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்வது ஆகியவற்றை சொந்த பொறுப்பில் மேற்கொள்வதாக தெரிவித்துள்ளார். ஆகவே, சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அனுமதி அளிப்பது குறித்து மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

<u>ந.க.எண். 3175/2025/எப்1),</u>

தீர்மானம் எண்.281, நாள் : 26.11.2025.
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

நாள் : 26.11.2025.
இடம் : ஆற்காடு.

(ஒம்)திருமதி.பெ.தேவி
நகரமன்றத் தலைவர்,
ஆற்காடு நகரட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர்
ஆற்காடு நகராட்சி